# பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டு விலகுங்கள்

## 2



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்திகளிலிருந்து

# பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டு விலகுங்கள்.



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: ஆவிக்குள்ளாகச் செல்லுதல், 28 ஏப்ரல், 1961

19. இப்பொழுது - இப்பொழுது, அங்கே அரசியல் களத்திலும் கூட ஒரு பெரிய மாற்றமானது நிகழ்ந்திருந்தது. ஆகாப் என்னும் பெயரைக் கொண்டிருந்த ஒரு மனிதன் மரணமடைந்திருந்தான். அவனுடைய குமாரன் யோராம் ராஜ்ய பாரம் பண்ணினான். அவனும் கூட அப்படியாக தன் தகப்பனாகிய ஆகாபைப் போல இருந்தான் என்று நினைக்கிறேன். ஓ, அவன் சில காரியங்களை சரி செய் திருந்தான், ஆனால் வேறே சில காரியங் களில் அவன் மோசமாக இருந்தான்.

ஆகவே இந்த விதமாகத்தான் அது இருக்கின்றது. நாம் ஒரு புது அமைப்பை

உண்டாக்கும்போது, பழைய அமைப் பானது கொண்டிராத சில காரியங்களை நாம் எடுத்து இன்னும் மோசமானதான ஒன்றை அதிலே வைத்து விடுகிறோம். அதன்பிறகு அப்படியே நாம் சென்று கொண்டிருக்கின்றோம். இந்த காலத்திலும் அந்த விதமாகத்தான் சம்பவித்திருந்தது.

சில இரவுகளுக்கு முன்னர், யோசபாத் ஆகாபை சந்திக்க வருவதையும், அவனுடன் ஒரு உடன்படிக்கையை, கூட்டணியை உருவாக்கினான் என்பதைக் குறித்து நான் பேசினேன். அவன் தவறான கூட்டாளிகளுடன் சேர்ந்து கொண்டான்.

20. இப்பொழுது, யோசபாத் இன்னு மாக தன்னுடைய ராஜ்யபாரத் தின் பதினெட்டாவது வருஷத்திலே இப்படி யாக நடந்தது மிகவும் வினோதமான ஒன்றாகும். ஆகாபின் இடத்தை யோராம்

எடுத்துக் கொண்டபோது, யோசபாத் அங்கே வந்தான் - இல்லை யோராம் அவனிடமாக ஆள் அனுப்பினான். ஏனென்றால் அவன் சிக்கலில் அகப்பட்டுக் கொண்டான்.

அப்பொழுது யோசபாத் அங்கே வந்து தவறான தோழர்களுடனே சேர்ந்துகொண் டான். அந்த விதமான காரியங்களை நாம் செய்வது விசித்திரமானதல்லவா? அவர் கள் வறுக்கப்படும் பாத்திரத்திலிருந்து எழும்பி குதித்து நேராக நெருப்பிற் குள்ளாக விழுந்து விடுகிறார்கள். ஜனங்கள் அப்படியாக இருப்பதை நீங்கள் காண லாம், அவர்கள் ..... அவர்கள் சரியாக வெளியே வந்து தேவனுக்கு ஊழியம் செய்ய ஆரம்பிப்பார்கள். அதன்பிறகு நடப்பது என்னவென்று தெரியுமா? அவர் கள் மறுபடியுமாக நேராக உலகத்திற்குள் ளாகவே திரும்பிச் சென்று விடுவார்கள்.

"நாயானது தான் கக்கினதை தின்னும்படி திரும்புவது போல, பன்றி சேற்றிலே புரளவும் திரும்பினது போல" என்று வேதாகமம் கூறுகிறது. நாயானது தான் சாப்பிட்டுள்ள உணவானது தனக்கு குமட்டலுணர்ச்சியை உண்டாக்குகிறது என்பதால்தான் அதை வாந்திப் பண்ணிப் போட்டது என்பதை அறிந்து கொள்ளுமானால், இரண்டாவது முறையும் அப்படியே அது செய்யும். ஆகவே எப்படியாயினும் அதை விட்டு நீங்கள் புறம்பாக தூரமாக இருக்கலாமல்லவா, அது உங்களுக்கு குமட்டல் உண்டாக்கும் படிச் செய்யுமானால் அதை உதறித்தள்ளி விட்டு, அதிலிருந்து விலகி இருங்கள். பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டு விலகுங்கள்.

# அவர்கள் ஆதி அன்பை இழந்து விட்டார்கள்



சகோ.வில்லியம் பிரன்ஹாம்
அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: எபேசு சபையின் காலம், டிசம்பர் 5, 1960

132. ஓ! இந்த சமுதாயம், இவர்களிடம் ஒருவர் பெரிய அங்கியை அணிந்து கொண்டு வரவேண்டும், ஆலய பாடகர் குழுவில் பாடுவதற்கு. அவர்கள் தங்கள் விரல் நகங்களை பளபளவென தீட்டிக் கொண்டும், சிகை அலங்காரம் செய்து கொண்டும், முகத்தில் எக்கச்சக்கமான ஒப்பனைகளுடனும் வந்து இருந்து கொண்டு, பாடகர் குழுவில் அங்கம் வகித்து எப்படியோ பாடுகிறார்கள். அது என்னவென்றே எனக்குத் தெரியவில்லை.

133. சமீபத்தில் நான் வியாபாரிகளால் நடத்தப்படும் ஒரு கன்வென்ஷனுக்குப் போயிருந்தேன். அது மட்டும் ஓரல் ராபர்ட்ஸ் அவர்களின் கூட்டமாக இல்லாதிருந்தால், அங்கிருந்து ஒரு

கூட்டம் மக்களை நான் வெளியே வரும்படி அழைத்திருப்பேன். நான் அங்கே பிரசங்கிக்க இருந்தேன். ஹோட்டலில் அதை அவர்கள் நடத்த முடியவில்லை. அவர்கள் என்னை ஓரல் ராபர்ட்ஸ் அவர்களுடைய கட்டிடத்திற்கு அழைத்துச் சென்றார்கள். அங்கே நான் என்னை ஓரல் அவர்களின் படிக்கும் அறையில் அமர்ந்திருக்கையில், அங்கே பெந்தெகொஸ்தே பிள்ளைகள் நின்று கொண்டி ருந்தார்கள். பதினாறு, பதினேழு மற்றும் பதினெட்டே வயது நிரம்பிய ஆண் பிள்ளைகள் மற்றும் பெண்பிள்ளைகள் அடங்கிய முப்பது அல்லது நாற்பது பேர்கள் அடங்கிய ஒரு குழு ஒரு விதமான பாடலை பாட இருந்தார்கள். அது சைகோவ்ஸ்கி அல்லது வேறு யாரோ ஒருவர் எழுதின பாடல் போல் எனக்குத் தோன்றியது. அதைக் குறித்து பெக்கி பேசுவது வழக்கம். இலக்கிய காவிய நடையிலான பாடலாக அது இருந்தது

என்று நான் நினைக்கிறேன். அப்பொழுது சகோதரர்கள் கூட்டத்தில் காணிக்கை எடுக்கவிருந்தார்கள். அவர்கள் கையில் சிறு கிண்ணம் இருந்தது. அவர்கள் குருடரைப் போல் நடித்தார்கள். எல்லாவித ஹாஸ்யத் துணுக்குகளையும் பேசிக்கொண்டு, நீங்கள் கேட்டிருக்க முடியாத அளவுக்கு பேசிக்கொண்டும் சென்றார்கள். அப்பெண் பிள்ளைகள், ஓரல் அவர்களின் கட்டிடத்தின் சுவர்களில் பூசப் போதுமான அளவுக்கு வர்ணத்தை, தங்கள் முகங்களில் பூசியிருந்தார்கள். இப்படியெல்லாம் நடந்து கொண்டும் அவர்கள் தங்களை “பெந்தெகொஸ்தேயினர்'' என்று அழைத்துக் கொள்கிறார்கள். அவர்கள் தங்களிலிருந்த ஆதி அன்பை இழந்து விட்டார்கள்.

134. “தேவனுக்கு பேரப்பிள்ளைகள் கிடையாது'' என்று கூறிய டேவிட் டூப்ளெஸ்ஸிஸ் அவர்களின் கருத்தை நான்

ஆமோதிக்கிறேன். நம்மிடையே மெதோடிஸ்டு பேரப்பிள்ளைகள் உண்டு. நமக்கு பாப்டிஸ்ட் பேரப்பிள்ளைகள் இருக்கின்றனர். நமக்கு பெந்தெகொஸ்தே பேரப்பிள்ளைகள் உண்டு. ஆனால் தேவனுக்கோ பேரப்பிள்ளைகள் கிடையாது. நீங்கள் தேவனுடைய குமாரரும் குமாரத்திகளுமாயிருக்கிறீர்கள். உங்களுடைய தாய் தந்தையர் நல்லவர்களாக இருக்கிறபடியினால், அவர்களினிமித்தம் நீங்கள் உள்ளே வந்துவிட முடியாது. அவர்கள் இந்த சிலாக்கியத்தைப் பெற என்ன கிரயத்தைச் செலுத்தினார்களோ, அதே கிரயத்தை நீங்களும் செலுத்தியாக வேண்டும். அவர்களைப் போலவே நீங்களும் மறுபடியம் பிறக்க வேண்டும். தேவனுக்கு பேரப் பிள்ளைகள் கிடையாது. நீங்கள் குமாரனாகவோ அல்லது குமாரத்தியாகவோ தான் இருக்கிறீர்கள்.

பேரப்பிள்ளையாக அல்ல, அது மட்டும் நிச்சயம்.

135. ஒரு அருமையான பெந்தெகொஸ்தே சபையில் நடந்த கூட்டத்திற்குச் சென்றிருந்தேன். அங்கே குட்டைப்பாவாடை அணிந்து தலைமுடியை வெட்டி, அறைகுறை ஆடை அணிந்து, ஏறத்தாழ வீனரைப் (wiener) போல சதையெல்லாம் வெளியே தெரியும்படி (வீனர் என்றால், மாட்டிறைச்சி அல்லது மாட்டிறைச்சியும் பன்றியிரைச்சியும் கலந்து, மிகவும் பொடியாக நறுக்கி ஆவியில் வேக வைத்து அதை சவ்வு போன்ற உறையில் அடைத்து வைத்திருக்கும் ஒரு வகை சாஸேஜ் பண்டம் - அந்த சவ்வு போன்ற உரைக்குள் வைக்கப் பட்டிருக்கும் அம்மிருகத்தின் இறைச்சி அல்லது சதை வெளியே நன்கு தெரியும். உடுத்தியிருந்த, மிகவும் பால் உணர்வுகளைத் தூண்டத்தக்கதான

முறையில் உடையுடுத்தியிருந்த பெண்கள் நான் உள்ளே நுழைவதைக் கண்டவுடனே சிதறி ஓட ஆரம்பித்தார்கள்.

136. நியாயத்தீர்ப்பின் நாளில் நீங்கள் இச்செய்கைக்காக பதில் சொல்ல வேண்டியவர்களாக இருக்கிறீர்கள். விபச்சாரப் பாவத்தைப் பற்றி குற்றமுள்ளவர்களாக இருக்கப் போகிறீர்கள். “ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும் அவளோடு தன் இருதயத்தில் விபச்சாரம் செய்தாயிற்று'' என்று இயேசு கூறினார். எனவே, ஒரு மனிதனின் கண்களுக்கு முன்பாக, இப்படிப்பட்ட கீழ்த்தரமான உடையில் நீங்கள் உங்களை காண்பித்து கொண்டால், யார் குற்றமுள்ளவர்கள் இதில்? நீங்களா அல்லது அந்த மனிதனா? சரியாக இருங்கள்? பொல்லாங்காய் தோன்றுகிற யாவையும் விட்டு விலகுங்கள். பாருங்கள்? அதைப் புரிந்து கொள்ளுங்கள்.

137. நீங்கள் என்ன செய்தீர்கள்? ஆதி அன்பை விட்டு விட்டீர்கள். அப்படிப்பட்டவர்களை, அவர்கள் கையில் ஒரு தம்புரூ கொடுத்து இசைக்கச் செய்து தெரு மூலையில் நின்று, கைகளைத் தட்டி தேவனை பாடித் துதிக்க வைக்க முடியாது. ஓ, முடியாது. அவர்களால், அங்கிகளை அணிந்த சிலரோடு சேர்ந்து கொண்டு, ஒருவிதமான 'க்ளாஸிக்கல்' இசையில் பாடல்களை பாட மட்டுமே தெரியும். அவர்கள் ஆதி அன்பை இழந்து விட்டார்கள். முதலாம் சபையின் காரியமும் அப்படித்தானிருந்தது.

138. அவர்களுக்கு உலகத்தைப் போல நடக்க வேண்டியதாயிருந்தது. அவர்களுக்கு, உலகத்தைப் போல் உடையுடுக்கவும், உலகத்தைப்போல் தோற்றமளிக்கவும், உலகத்தைப்போல் நடந்து கொள்ளவும் வேண்டியதாயிருந்தது. அவர்களுக்கு அவர்களு டைய அபிமான தொலைகாட்சி

நட்சத்திரம் உண்டு. தொலைக்காட்சியை பார்க்காமல் அவர்களால் இருக்க முடியாது. 'நாங்கள் சூசியை நேசிக்கிறோம்' போன்ற நிகழ்ச்சிகளெல்லாம் அவர்களுக்கு உண்டு. அதையெல்லாம் அவர்கள் பார்த்தேயாக வேண்டி உள்ளது. அந்நிகழ்ச்சியை கண்ணுற, அவர்கள் ஜெபக் கூட்டங்களைக் கூடத் துறந்து வீட்டில் தங்கிவிடுகின்றனர். அல்லது அப்படியே அவர்கள் ஜெபக்கூட்டத்திற்குப் போய்விட்டால், அந்த தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை பார்க்க வீடுகளுக்கு சீக்கிரமாக திரும்ப வசதியாக ஜெபக்கூட்டத்தை சீக்கிரமே முடித்துவிட வேண்டுமென தங்கள் போதகரை நோக்கி கூச்சலிடுகின்றனர். தேவ பிரியராயிராமல் உலகத்தின் மேல் பிரியராயிருக்கிறார்கள்.

139. அவர்கள் மிகவும் சடங்காச்சாரக்காரர்களாக மாறி, 'ஆமென்'' சொல்ல இயலாத அளவுக்கு

ஆகிவிட்டார்கள். அது அவர்களுடைய ஒப்பனைகளையெல்லாம் உடைத்துவிடும். அவர் களிடம் பெந்தெகொஸ்தே அனுபவம் இல்லை. அது பாப்டிஸ்ட் அனுபவமும் அல்ல. ப்ரெஸ்பிடேரியன்களுக்கும் தொடக்கத் திலிருந்தே அவ்வனுபவம் கிடையவே கிடையாது. நான் பெந்தெகொஸ்தே அனுபவத்தைப் பற்றிக் கூறுகிறேன். நான் கூறுவது சலிப்புண்டாக்கும் என்றறிவேன். ஆனால் இவற்றி லிருந்து நமக்கு ஒரு பிறப்பு உண்டாக வேண்டும். பிறப்பை அடைய ஒரு மரணம் அவசியமாயிருக்கிறது. பாருங்கள்? பாருங்கள்? அது சத்தியமாயிருக்கிறது. ஆனால், நீங்கள் ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டுவிட்டீர்கள்.

# இது சிறுவருக்கு ஒரு பாடமாக அமையக்கூடும்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: இடைவெளியில் நிற்றல், ஜூன் 23, 1963

100. இந்த ஃப்ளெட்சரைப் பற்றி நான் நினைவு கூருகையில், அவன் ஒரு நல்ல பையன். இது சிறுவருக்கு ஒரு பாடமாக அமையக்கூடும். சில ஆண்டுகளுக்கு முன்பாக ஜேம்ஸ் ஃப்ளெட்சர் ப்ராய் என்ற அந்த கட்டழகு வாலிபன் தவறான கூட்டத்தாரோடு சேர்ந்து கொண்டு, தனது முதலாவது குடியைப் பருகினான். எனது வீட்டின் திரைகளுக்குப் பின்னாக இருந்து அவன் என்னை அழைத்ததை நான் நினைவு கூறுகிறேன். அவரது தந்தை அநேகமாண்டுகளுக்கு முன்பே மகிமைக் குள் கடந்து சென்று விட்டார். அவர் அன்று கித்தார் இசைக் கருவியில் இந்தப் பாடலைப் பாடிக் கொண்டிருந்தார்.

தூரத்தோர் குன்றிலே

ஓர் நீசக் குருசு நிற்குதே

101. ஃப்ளெட்சர் என்னை திரும்பவும் அழைத்தான். “சகோதரன் பில் (பிரான் ஹாம்) எனக்காக ஜெபியுங்கள். எனது தந்தை அந்தப் பாடலை பாடிக் கொண் டிருந்தார், ஆனால் நானோ இன்று இவ்வாறு குடித்துக் கொண்டிருக்கிறேன்” என்று கூறினான்.

102. "ஃப்ளெட்சர்!” (அப்பொழுது அவன் 18 வயது வாலிபனாயிருந்தான்) என்று நான் அவனை அழைத்து, “அந்த வழியிலே செல்லாதே" என்று கூறினேன். ஆனால் அவன் செவிமடுக்கவில்லை. அவன் தொடர்ந்து அத்தவறான பாதையி லேயே சென்று முடிவில் ஒருமுழுக் குடிகாரனாக மாறிவிட்டான். அவனது மனைவி அவனை விட்டும், அவனது

பிள்ளைகளை விட்டும் சென்று விட்டாள். இவ்வேளையில் நான் அவனை நேசிக் கிறேன் என்பதை தேவனறிவார்.

103. வெறும் நாடோடியாக அலைந்து கொண்டிருந்த அவனுக்காக நான் ஜெபிக்கச் சென்றிருந்தேன். அவனுக்குக் கோபம் வந்தது. சமீபத்தில்தான் நான்

அவனுக்காக ஜெபிக்கப்போயிருந் தேன். அப்பொழுது ஏழு முத்திரைகளை நான் பிரசங்கித்துக் கொண்டிருந்தேன். "ஃப்ளெட்ச்! என்னிடம் இரு ஜோடி உடுப்புகள் உள்ளன. அவற்றை நான் உனக்கு தர விரும்புகிறேன்" என்று நான் கூறினேன்.

“அதை நீங்கள் எனக்குத் தராதீர்கள்” என்று கூறினான்.

அவனுக்கு துணிமணிகள் கிடையாது என்பதை நான் அறிவேன். எனவே நான் அவனிடம், “ஏன் நீ அந்த துணிகளை எடுத்துக்கொள்ளக் கூடாது” என்று வினவினேன்.

அவன் “ஊ...ஊ” என்று கூறிவிட்டு, என்னை உற்று நோக்கி "நான் அவற்றை என்ன செய்வேன் தெரியுமா? அவ்வுடுப் புக்களை அடமானம் வைத்து பணம் பெற்று அதினால் குடித்து விடுவேன்” என்று கூறினான்.

நான், "ஃப்ளெட்ச்! நான் கொஞ்சம் பணம் உனக்குத் தருகிறேன்” என்று கூறினேன்.

104. அவன் அதற்கு, “இல்லை, சகோதரன் பில் அவர்களே, நீர் அதை எனக்குச் செய்ய வேண்டாம்” என்று கூறினான். அவன் தனது இருதயத்தில்

உண்மையானவனாக இருந்தான். ஆனாலோ அவன் குடிகாரனாக மாறி, அலைந்து திரிகிறவனாக ஆகிவிட்டான். அவனது மனைவியும் தவறான பாதையைத் தெரிந்துகொண்டு விட்டாள். இவ்வாறாக சம்பவங்கள் யாவும் அந்த சிறுமைப்பட்டவனுக்கு நேர்ந்துவிட்டது.



# பார், நீ பிசாசின் எல்லைக்குள் சென்றுவிட்டாய், அதனின்று விலகு! பொல்லாங்கானதாய் தோன்றும் எல்லாவற்றையும் உதறித் தள்ளு!



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: இதுவரை சண்டையிட்டவைகளில் மிகப்பெரிய யுத்தம், 62-03-11

126. ஒரு சமயம் இங்கு ஒரு சிறு பெண் இருந்தாள். இன்றைக்கும் கூட அவள் இங்கு உட்கார்ந்து கொண்டிருக்க லாம். அவளுடைய பெயர் நெல்லி சான்டர்ஸ். முதன் முறையாக பிசாசு துரத்தப்பட்டதை நான் கண்டிருக்கிறேன் என்றால் (நாங்கள் கல்லறைத் தோட்டத் துக்கு அப்பால் மூன்று பிளாக்குகள் தள்ளி குடியிருந்தோம். அப்பொழுது தான் நான் ஒரு பிரசங்கியானேன். நான் இந்த மூலையில் ஒரு கூடாரக் கூட்டத்தில் பிரசங்கித்துக் கொண்டிருந்தேன் அந்த சிறு பெண் மிகச் சிறந்த நடனக்காரி. அவள் இங்குள்ள உயர்நிலைப் பள்ளியில்

படித்துக்கொண்டிருந்தாள். அவளும் லீஹார்னும் (இந்தப் பட்டினத்திலுள்ள உங்கள் அநேகருக்கு லீஹார்னைத் தெரியும். அவன் குளிக்கும் அறை ஒன்றை நடத்தி வருகிறான். அவளும் லீ ஹார்னும் நாட்டிலேயே மிகச் சிறந்த நடன ஜோடி, அவன் ஒரு கத்தோலிக்கன். அவர்களுக்கு மதம் ஒருபொருட்டல்ல. எனவே (நெல்லி யும் மற்றவர்களும், அவள் சிறந்த நடனக்காரி , அவனும் கூட. அங்கு ப்ளாக் பாட்டம், 'ஜிட்டர்பர்க்ஸ் போன்ற நடனங் கள் ஆடப்பட்டன. இவர்களிருவரும் நாட்டிலேயே மிகச்சிறந்த நடனக்காரர்கள்.

127. ஒருநாள் (ஒரு இரவு) அவள் தடுமாறிக்கொண்டு கூட்டத்திற்கு வந்தாள். அந்த சிறு நெல்லி பீடத்தின் முன்னால் முகங்குப்புற விழுந்தாள். தேவன் அவளை ஆசீர்வதிப்பாராக. அவள் பீடத்தின் முன்னால் விழுந்துகிடந்து, தலையை

தூக்கி அழ ஆரம்பித்தாள். அவளுடைய கண்ணீர் கன்னங்களில் வழிந்தது. அவள், ''பில்லி'' என்றாள் அவளுக்கு என்னைத் தெரியும்). அவள், “நான் இரட்சிக்கப்பட வேண்டுமென்று விரும்புகிறேன்”என்றாள்.

நான், ''நெல்லி, நீ இரட்சிக்கப்பட முடியும். பெண்ணே, இயேசு உன்னை ஏற்கனவே இரட்சித்து விட்டார். அவருடைய வார்த்தையின் அடிப்படையில் அதை நீ ஏற்றுக்கொள்ள வேண்டும்“ என்றேன். அவள் அங்கு தங்கியிருந்து, அழுது, ஜெபித்து, உலக காரியங்களுக்கு மறுபடியும் செவி கொடுப்பதில்லையென்று தேவனிடம் வாக்குகொடுத்தாள். உடனே அவளுடைய ஆத்துமாவில் ஒரு அழகான இனிமையான சமாதானம் குடிகொண்டது. அவள் எழுந்து சத்தமிட்டு, தேவனைத் துதித்து, அவரை மகிமைப்படுத்தினாள்.

128. அதற்கு பின்பு ஆறு அல்லது எட்டு மாதங்கள் கழித்து, ஒரு இரவு அவள் ஸ்பிரிங் தெரு வழியாக வந்து கொண் டிருந்தாள் இப்பொழுது அவள் வாலிபப் பெண், அவளுக்கு அப்பொழுது சுமார் பதினெட்டு வயதிருக்கும். அவள் என்னிடம் வந்து, ''ஹோப்...'' (அது என் மனைவி. அவள் மரித்துவிட்டாள்). அவள், ''காண்பதற்கு நான் ஹோப்பையும் ஜீனையும் போல் இருந்திருந்தால் நலமா யிருக்கும். அவர்கள் உலக காரியங்களில் சிக்கிக்கொண்டதேயில்லை'' என்றாள். அவள், 'உலகம் நம்மேல் ஒரு அடையா ளத்தை போட்டுவிடுகிறது. எனக்கு கரடுமுரடான தோற்றம் உள்ளது. நான் முகவர்ணம் தீட்டிக்கொள்வதைவிட்டு விட் டேன். ஆயினும் என் முகம் கரடுமுரடாக காணப்படுகிறது. அவர்களுடைய முகம் எவ்வளவு இளமையாயும் களங்கமற்ற

தாகவும் காணப்படுகிறது! நான் அப்படி செய்யாமலிருந்தால் நலமாயிருக்கும்'' என்றாள்.

நான், 'நெல்லி, இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களினின்றும் சுத்தி கரிக்கிறது. தேனே, நீ சென்று விசுவாசி' என்றேன்.

129. வேய்ன் ப்ளட்ஸோ (அவனை உங்களில் அநேகருக்கு தெரியும். அநேக ஆண்டுகளாக அவன் என் ஆப்த நண்பன்). அவன் பயங்கர குடிகாரனா யிருந்தான். என் சகோதரன் எட்வர்ட்டுடன் அவன் இங்கு வந்திருந்தான். அவன் குடித்து தெருவில் விழுந்து கிடந்தபோது, அவனை நான் தூக்கிக்கொண்டு வந்தேன். ஏனெனில் போலீசார் அவனைக் கைது செய்ய முயன்றனர். அவனை இங்கு கொண்டு வந்தேன். அப்பொழுது நான் ஒரு பிரசங்கி. என் பெற்றோருடன் வசித்து

வந்தேன். அது எனக்கு விவாகமாவதற்கு அநேக ஆண்டுகட்கு முன்பு. நான் அவனைக் கொண்டு வந்து படுக்கையில் கிடத்தினேன். நான் சாய்வு நாற்காலியில் உறங்கினேன். பிரன்ஹாம் குடும்பம் பெரியது என்று உங்களுக்கு தெரியும் (நாங்கள் பத்து பேர்). எங்களுக்கு நாலு அறைகள் இருந்தன. என்னிடம் ஒரு பழைய சாய்வு நாற்காலி இருந்தது. நான் அதை இழுத்து, அதில் உறங்கினேன். குடித்திருந்த வேய்னை நான் படுக்கையில் கிடத்தினேன். அவனை வீட்டுக்குத் தூக்கிக் கொண்டு வந்து படுக்கையில் கிடத்த வேண்டியதாயிற்று. நான் அங்கு படுத்துக் கொண்டிருந்தேன். நான், 'வேய்ன், இப்படி செய்வது உனக்கு வெட்கமாயில்லையா?' என்று கேட்டேன்.

130. அவன்,''உ, து, பில்லி, என்னிடம் அப்படி பேசாதே', என்றான் (சகோ.

பிரன்ஹாம் குடிகாரன் உளறுவதைப்போல் பேசி காண்பிக்கிறார் - ஆசி). நான் அவன் மேல் என் கையை போட்டு, 'வேய்ன், உனக்காக நான் ஜெபிக்கப்போகிறேன். கர்த்தர் உன்னை ஆசீர்வதிப்பாராக'' என்றேன்.

நான் இரட்சிக்கப்பட்டு அப்பொழுது ஏறக்குறைய ஒரு ஆண்டு காலம் தான் ஆகியிருந்தது. அப்பொழுது திடீரென்று வாடகை காரின் கதவு திறக்கப்பட்டு வேகமாக மூடும் சத்தம் கேட்டது, யாரோ கதவை வேகமாக தட்டி, சகோ. பில், சகோ. பில் என்று கூப்பிடுவது கேட்டது (சகோ. பிரன்ஹாம் பிரசங்க பீடத்தைபதினைந்து தடவை தட்டுகிறார் - ஆசி). "

நான்,''இது என்ன, யாரோ மரித்துக் கொண்டிருக்கிறார்கள் போலிருக்கிறது என்று எண்ணினேன். நான் கதவினருகே ஓடினேன். என் பழைய துணிகளை

எடுத்து, என் பைஜாமாவின் மேல் சுற்றிக் கொண்டு, வேய்னையும் போர்த்திவிட்டு, கதவினருகே ஓடினேன். அது பெண்ணின் குரல் போன்றிருந்தது. நான் கதவைத் திறந்தபோது, இந்த வாலிபப் பெண் அங்கு நின்று கொண்டிருந்தாள். அவள்,''உள்ளே வரலாமா?'' என்று கேட்டாள். நான், ''உள்ளே வா“ என்று சொல்லி விளக்கைப் போட்டேன்.

அவள் அழுது கொண்டே ,“ஓ, பில், பில்லி, நான் முடிந்து போனேன்,! நான் முடிந்து போனேன்''! என்றாள்.

131. ''என்ன நேர்ந்தது, நெல்லி மாரடைப்பு ஏதாகிலும் ஏற்பட்டதா?'' என்று கேட்டேன்.

அவள், 'இல்லை, சகோ. பில். நான் ஸ்பிரிங் தெரு வழியாக வந்து கொண் டிருந்தேன். உண்மையில் சகோ.பில்,

உண்மையில் சகோ. பில், நான் தவறு செய்ய வேண்டுமென்று நினைக்கவே யில்லை, நான் தவறு செய்ய வேண்டு மென்று நினைக்கவேயில்லை'' என்றாள்.

நான், 'என்ன நேர்ந்தது?'' என்று கேட்டேன். எனக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. நான் அப்பொழுது ஒரு வாலிபன். நான் நினைத்தேன் ......

அவள்,"ஓ, சகோ. பில், நான் சின்னா பின்னமாகிவிட்டேன்'' என்றாள்.

நான், ''அமைதியாயிரு, சகோதரியே, நடந்ததை கூறு என்றேன்.

அவள்,''நான் தெருவின் வழியாக நடந்து ரெட்மென் அரங்கத்தை அடைந் தேன்...'' என்றாள் (அங்கு சனிக்கிழமை இரவுகளில் நடனம் நடப்பது வழக்கம்). அவள்,''என் உடைகளுக்காக துணி வாங்கிக் கொண்டு திரும்பும்போது,

இசையைக் கேட்டேன், மேலும் அவள், 'உங்களுக்கு தெரியுமா?'' என்றாள். நான் ஒருநிமிடம் அங்கு நின்றேன். அது இனிமையாகிக் கொண்டே இருந்தது. அங்கு நின்றால் தவறொன்றுமில்லை'' என்று நினைத்தேன்.

132. அங்குதான் அவள் தவறு செய்தாள் - சற்று நேரம் அங்கு நின்றாள்.

அவள் இசையைக் கேட்டுக்கொண்டேயிருந்தாள். அவள்,''ஓ, ஆண்டவரே, உம்மை நான் நேசிக்கிறேன் என்பதை நீர் அறிவீர். நானும் நீயும் இந்த இடத்தில் நடன போட்டிகளில் எத்தனையோ விருது களை வென்றது. என் ஞாபகத்துக்கு வருகிறது. அந்த இசை முன்பு என்னைக் கவர்வது வழக்கம். ஆனால் இப்பொழுது இல்லை'' என்று நினைத்தாள். ஓ, ஓ! ஓ, ஓ! அது உன்னைக் கவரவில்லை என்றா நினைக்கிறாய்? அது ஏற்கனவே உன்னைக்

கவர்ந்துவிட்டது. அவன் உன்னை நடன கூடத்திற்கு அனுப்பினதற்கு அது சமானம். பாருங்கள்?

எத்தனை பேருக்கு நெல்லி சான் டர்ஸை தெரியும்? நல்லது, உங்கள் அனை வருக்கும் என்று நினைக்கிறேன். ஆம், நிச்சயமாக! எனவே அவர்கள்.... அவள் தொடர்ந்து, என்ன நேர்ந்தது தெரியுமா? நான் அரங்கத்தின் படிகளில் ஏறிச் சென்றால், ஒரு சிலருக்கு என் சாட்சியை அறிவிக்க முடியும் என்று நினைத்தேன்' என்றாள்.

**பார், நீ பிசாசின் எல்லைக்குள் சென்று விட்டாய், அதனின்று விலகு ! பொல்லாங் கானதாய் தோன்றும் எல்லாவற்றையும் உதறித் தள்ளு !**

அவளோ படிகளில் ஏறி சில நிமிடங் கள் அங்கு நின்றாள். முதலாவதாக

நடந்தது என்ன தெரியுமா? சில நிமிடங்களுக்குள் ஒரு பையனின் கரங்களைப் பிடித்து நடனமாடத் தொடங்கி விட்டாள். பின்பு அவளுக்கு சுய நினைவு வந்த போது, அங்கு நின்று,''நான் நிரந்தரமாக இழக்கப்பட்டேன்'' என்று அழுதாள்.

133. அப்பொழுது நான் நினைத்தேன் எனக்கு வேதாகமம் அதிகம் தெரியாது. ஆனால் இயேசு, 'என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள்' என்று கூறியிருக்கிறார் என்று நினைக்கிறேன்'' என்று. வேய்னுக்கும் அப்பொழுது குடி மயக்கம் சற்று தெளிந்து, அங்கு நடப்பதை உட்கார்ந்து கவனித்துக் கொண்டிருந்தான். பாருங்கள்? நான், ''பிசாசே, நீ யாரென்று எனக்குத் தெரியாது. ஆனால் இப்பொழுது உன்னிடம் கூறுகிறேன். இவள் என் சகோதரி, இவளைப் பிடித்துக்கொண்டிருக்க உனக்கு எவ்வித உரிமையும்

கிடையாது, அவள் அதை செய்ய வேண்டுமென்று நினைக்கவில்லை; அவள் ஒரு நிமிடம் அங்கு நின்றாள்“ (அங்குதான் அவள் தவறு செய்தாள். அவளை விட்டு நீ வெளியே வரத்தான் வேண்டும். நான் சொல்வது கேட்கிறதா?'' என்றேன்.

கர்த்தர் எனக்குதவி செய்வாராக. (தேவன் நியாயாசனத்தில் உட்காருவார் என்று எனக்குத் தெரியும்). திரையிடப் பட்டிருந்த அந்த கதவு தானாகவே திறந்து மூடத் தொடங்கினது பம்பிடி, பிளம்பிடி, கா - ப்ளம்ப், கா-ப்ளம்ப், கா-ப்ளம்ப். நான் நினைத்தேன்... அவள்,“பில்லி, அங்கே பாருங்கள்'' என்றாள்.

நான்,“ஆமாம், அது என்ன?' என்றேன்... அவள், ''எனக்குத் தெரியாது'' என்றாள்.

134. நான்''எனக்கும் தெரியவில்லை'' என்றேன். கதவு பம்பிடி-பம்ப், டி - பம்ப் என்று ஓசையுண்டாக்கி, திறந்து மூடிக் கொண்டிருந்தது, “என்ன நேர்ந்தது?'' என்று நான் நினைத்தேன். நான் இப்படி பார்த்துவிட்டு, ''சாத்தானே, அவளை விட்டுப் போ; இயேசு கிறிஸ்துவின் நாமத்திலே அவளை விட்டுவெளியே வா'' என்றேன். அப்படி நான் கூறினபோது, இவ்வளவு நீளமுள்ள ஒரு பெரிய வௌவால்; அதன் செட்டைகளிலிருந்து நீண்ட ரோமம் தொங்கிக் கொண்டிருந்தது. அது அவள் பின் பக்கத்திலிருந்து'விர்ர்ர்ர்' என்று வேகமாக பறந்து என்னை நோக்கி வந்தது. நான், 'ஓ, ஆண்டவராகிய தேவனே, இயேசு கிறிஸ்துவின் இரத்தம் இதனின்று என்னை பாதுகாப்பதாக'' என்றேன்.

வேய்ன் படுக்கையிலிருந்து குதித்தெழுந்து பார்த்தான். அது நீண்ட நிழலைப் போல் அங்கு சுற்றிச் சுற்றி வட்டமிட்டு படுக்கைக்குப் பின்னால் சென்றது. வேய்ன் படுக்கையை விட்டு எழுந்து வேகமாக அடுத்த அறைக்கு ஓடினான்.

135. நான் நெல்லியை வீட்டுக்குக் கொண்டு சென்றுவிட்டு வந்தபோது அதை காணவில்லை அம்மா போர்வையை உதறிப் பார்த்தார்கள். ஆனால் படுக்கையில் ஒன்றுமில்லை. அது என்ன? ஒரு பிசாசு அவளை விட்டு வெளியேறினது. என்ன நேர்ந்தது? அவள் ஒரு வினாடி அங்கு நின்றாள். அவ்வளவுதான்.

நீங்கள் நிற்கவே வேண்டாம். தேவன் தமது வார்த்தையை உங்கள் இருதயங்களில் ஆழமாகப் பதிக்கிறார். அந்த பட்டயத்தை நீங்கள் எடுத்துக்கொண்டு, வெட்டத் தொடங்குங்கள். அல்லேலூயா

''எனக்கு எதற்கும் நேரமில்லை. இப்பொழுது தான் கடந்து வந்தேன். இளைப்பாறுவதற்கு கூட எனக்கு நேரமில்லை'' என்று சொல்லுங்கள்.

136. அந்த தீர்க்கதரிசி ,''என் கோலை எடுத்துக்கொண்டுபோய் குழந்தையின் மேல் வை. வழியில் யார் பேசினாலும் மறுமொழி கூறாதே.'' பிசாசு, 'உன் உடல் நிலை எப்படி இருப்பதாக உணருகிறாய் ....? என்று கேட்டால், மறுமொழி கூறாதே. போய்க் கொண்டேயிரு'' என்றான்.

பிசாசு சொல்கிறான், 'உனக்கு இன்னாரைத் தெரியுமா? அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொண்ட பின்பு, புத்தி சுவாதீனத்தை இழந்து விட்டார்கள்'' என்று. அவனுக்கு மறுமொழி கூறாதீர்கள், சென்று கொண்டேயிருங்கள். உங்களுக்கு இன்னாரைப்பற்றித் தெரியாது. அது உனக்கும் தேவனுக்குமிடையே உள்ள விஷயம். அது

உண்மை. தேவனை உங்களுக்கு முன்பாக வையுங்கள்.



நான் உங்களுக்கு இதைக் கூறுகிறேன்;
இன்று நமக்குத் தேவை என்னவென்றால்,
தங்கள் பிள்ளைகளுக்காக ஜெபிக்கிற நல்ல,
பழைமை நாகரீகமான தாய்தகப்பன்மார்கள்
தான் இன்னும் அதிகமாக நமக்குத் தேவை



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்தியிலிருந்து

❶

## செய்தி: வழக்காடுவோம் வாருங்கள், 04.10.55

ஒரு மருந்து என் மகன் பில்லி பாலை ஏறக்குறைய கொன்றே போட்டு விட்டது. சுமார் இரண்டு, மூன்று ஆண்டுகளுக்கு முன்னால் பில்லி பால் ஒருவித பழக்கத் திற்குள்ளாகி இங்குமங்கும் சுற்றிக் கொண் டிருந்தான். அதன் காரணமாகத்தான் நான் அவனை வாக்சஹாட் சீக்கு (waxahatchee), அங்குள்ள பள்ளிக்கு அனுப்ப வேண்டிய தாயிருந்தது. நம்முடைய பொதுப்பள்ளி யில் பையன்கள் கூட்டமானது சிகரெட் களை பிடித்துக் கொண்டும் மற்றவை களைச் செய்து கொண்டும் இருந்தன. ஒரு

நாள் பில்லி வீட்டிற்கு வந்து “அப்பா எப்படி இருக்கிறீர்கள்”? என்றான்.

அப்பொழுது ஒரு தரிசனம் அவன் மீது மேலெழும்பத் தொடங்கியதை நான் கண்டேன். நான் அப்பொழுது “இங்கே ஒரு நிமிடம் வா, நான் உன்னோடு சற்று பேச வேண்டும்” என்றேன்.

அதற்கு அவன், "அப்பா என்ன அது?" என்றான்.

நான், “நீ செய்து கொண்டிருப்பது என்ன, நீ சிகரெட்டு புகைக்கின்றாயே?" என்றேன்.

அவன் “நான் புகை பிடிப்பதில்லை ” என்றான்.

அப்பொழுது நான், 'பில்லி, என்னிடம் நீ பொய் சொல்லாதே” என்றேன்.

அப்பொழுது அவன் அழத்தொடங்கி னான்.

அவன், "அப்பா இனிமேல் அவ்வித மாக நான் செய்ய மாட்டேன்" என்றான்.

பிறகு அவன் வெளியே சென்றான். அவன் தொடர்ந்து சிகரெட்டு பிடித்துக் கொண்டு தான் இருந்தான். அவனால் அதை மறைக்கக்கூடாதிருந்தது, மறைக்க முடியவில்லை. ஆகவே நான் ஒரு தரிசனம் கண்டடேன். அதில் பில்லி எனக்கு கீழ்ப்படியாதிருந்து, ஒரு ஜன்ன லின் வழியாக குதித்துச் சென்று மிகவும் சிரித்துக் கொண்டு இருந்தான். காலமானது கடந்து கொண்டே சென்றதை நான் அத்தரிசனத்தில் கண்டேன். நான் அந்த தரிசனத்திலிருந்து வெளி வந்த உடன், என் உச்சக்கட்ட குரலில் நான் "ஓ தேவனே, என் மகனை எடுத்துக் கொள்ளாதேயும், கர்த்தாவே, எனக்கிருக்கும் ஒரே மகன் அவன் தான்" என்று கதறினேன். நான் என் உச்சக்கட்ட குரலில் நான் சத்தமாய்க் கதறிக்கொண்டிருந்தேன். பில்லியிடம் நான் கூறினேன்.

❷

# செய்தி: தேவனை அணுகும்விதம், 55-0123A

21. வேதாகமத்திலேயே மிகப் பழமை யான புத்தகமாக யோபுவின் புஸ்தகம் இருக்கிறது… வயதான மனிதனாகிய யோபு… அவனுடைய வீட்டில் பேரழிவு வருவதற்கு சற்று முன்பு, அவன் ஒருவிதமாக கவலை கொண்டிருந்தான். அவனுக்கு ஒரு கூட்டம் பிள்ளைகள் இருந்தார்கள், அவர்கள் உலகப் பிரகாரமாக வெளியிலே போய்க் கொண் டிருந்து, உலகத்தின் காரியங்களுடன் சேர்ந்து கொண்டிருந்தார்கள்.

அது எப்படிப்பட்ட ஒரு உணர்ச்சியாக இருக்கும் என்று பெற்றோர்களாகிய நம் எல்லாருக்கும் தெரியும். உங்களுடைய

பிள்ளைகள், உங்களுடைய அதே இருதயம், உலகத்தோடு சேரத் துவங்கும் போது, அவிசுவாசிகள் மத்தியில் வெளியே போய் விடுகிறார்கள். பில்லி இந்நேரத்தில் இங்கே இருக்கிறான் என்று நான் நினைக்கவில்லை; அவன் ஒருக்கால் சகோதரன் உட் அவர்க ளோடு வெளியிலிருந்து பேசிக் கொண்டிருக் கிறான் என்று நினைக்கிறேன். ஆனால் எங்கள் பட்டணத்தில், எங்களுக்கு ஒரு கிறிஸ்தவ பள்ளியும் கிடையாது. அங்கே ஒரு கூட்டம் உலகப்பிரகாரமான பிள்ளைகளும், சிறு பெண்களும், பையன்களும் கூட இருக்கிறார்கள். என்னுடைய மகனை அந்தப் பள்ளிக்கு அனுப்புவதைக் குறித்து நான் எண்ணிப் பார்த்த போது, நான் அவனுக்கு பயிற்றுவித்திருந்த ஒவ்வொரு காரியத்தையும் அறிந்திருந்தேன். அவன் உண்மையாகவே மனமாற்றம் அடைந்து, உண்மையாகவே, கிறிஸ்துவிடம் வராவிட்டால், அதாவது, அவனுடைய சுபாவங்கள் எல்லாம் மாறி விடும், அவன் இந்த உலகப்பிரகாரமான கூட்டத்தோடு சேர்ந்து கொண்ட உடனே,

என்னுடைய கைகளின் கீழிருந்து அவன் விலகிச் சென்று விட்டான். ஏனென்றால் அவன் ஒரு நல்ல பையனாயிருந்தாலும், அது ஒரு பொருட்டல்ல, அவனுக்குள் இருக்கும் அதே சுபாவமானது, அது... (கிரியை) செய்வதில்லை. அவனுக்கு ஒரு ஊழியக்கார தகப்பனார் உண்டு, அவனுக்கு ஒரு பக்தியான வீடும் உள்ளது, அங்கு நாங்கள் எங்கள் வீட்டில் உலகப்பிரகாரமான எந்தக் காரியத்தையும் அனுமதிப்பதில்லை... கிறிஸ்த வர்கள் ஜீவிக்க வேண்டியது போல, நாங்கள் தேவனுடைய கிருபையினால் ஜீவிக்கவே முயற்சி செய்கிறோம், அந்த செல்வாக்கு (தாக்கம்) அவனுக்கு முன்பாக ஏற்படுத்தப் பட்டிருந்தது. அவன் இழக்கப்பட்டு போயிருந் தால், அவன் நிச்சயமாகவே இழக்கப்பட்டவ னாய் ஒரு நீதியான வீட்டை நோக்கி நடந்து வந்து விடுவான் என்பதை நான் அறிந்திருந் தேன். அவன் என்னுடைய ஜீவியத்தோடு நடந்து வர வேண்டுமென்று தான் நான் விரும்புகிறேன். அவன் வேதாகமத்தோடு நடக்க வேண்டும். அவன் கிறிஸ்துவின்

இரத்தத்தோடு நடக்க வேண்டும். ஏனென்றால் தேவனுடைய கிருபையினால், நான் நிச்சய மாகவே அவனுக்கு முன்பாக அதைக் காண்பிப்பேன்.

22. ஆனால் அவனுடைய சுபாவம் மாறி யிராவிட்டால், அவன் அப்படியே அதேவித மாகவே தொடர்ந்து செய்வான். பில்லி உயர்நிலைப்பள்ளியில் சேர்ந்த அந்த நாளைக் குறித்து நான் எவ்வளவாக எண்ணிப் பார்க்கிறேன். நான், "ஓ, என்னே" என்று எப்படியாக எண்ணினேன். அவன் இன்னும்... என்பதை அறிந்திருந்தேன். அவன் கொண் டிருந்தான், ஓ, அவன் ஞானஸ்நானம் பெற்றவனாயிருந்தான், நிச்சயமாக, ஆனால் அவன் கிறிஸ்துவுக்கு முழுமையாக ஒப்பு விக்கவுமில்லை, அர்ப்பணிக்கவுமில்லை. ஒரு பிள்ளைக்குரிய சுபாவம் இன்னும் அவனுக் குள் இருந்தது என்பதை அறிந்து கொண்டு, என்னுடைய இருதயம் எவ்வளவாய் அவனுக்காக ஏங்கினது, நான் எவ்வளவாக ஜெபித்தேன், என்னுடைய காரில் வெளியே சென்று சுற்றிலும் பிரயாணம் செய்து,

“தேவனே, எனது மகன் அங்கே வெளியிலுள்ள அந்த விதமான காரியத்தோடு தொடர்பு வைத்துக் கொள்ள நீர் அனுமதிக்க வேண்டாம்” என்று கூறுவேன். நான் எப்படி யாக, “தேவனே, நான்-நான் நம்புகிறேன், நான் ஜெபிக்கிறேன், அவனுடைய தாய் மரித்து விட்டாள், நானே அவனுக்கு தகப்ப னாகவும் தாயாகவும் இருந்து வருகிறேன். எனவே தயவுசெய்து அவன் அங்கே வெளியில் இருப்பவர்களோடு தொடர்பு வைத்துக் கொண்டு, அவன் தொல்லையில் சிக்கிக் கொள்ள அனுமதிக்க வேண்டாம். ஏதாவதொரு வழியில் நீர் அவனைப் பாது காத்துக் கொள்வீரா?” என்று கூறினேன்.

23. ஓ, இந்தப் பிற்பகல் வேளையில், எனக்கு நேரம் இருக்குமானால், தேவன் எப்படியாக பில்லியின் வழிக்குக் குறுக்கே மீண்டும் மீண்டுமாக சிகப்பு விளக்கை வைத்தார் என்பதை விளக்கிக் கூற பல மணி நேரங்கள் பிடிக்கும். ஆம், ஐயா. நான் அவனை... கண்டிருக்கிறேன். இங்கே சமீபத்

தில், நான் நியூஆல்பெனியில் உட்கார்ந்து கொண்டிருந்தேன், குழந்தையினுடைய (அவளுடைய) பற்கள் எல்லாம் முளைத்துக் கொண்டிருந்தன, பள்ளியிலுள்ள சிறு பிள்ளை அவளுடைய பற்களை உடைத்து விட்டது. அதன்பிறகு, பில்லி வெளியே மீன் பிடித்துக் கொண்டிருந்து விட்டு, உள்ளே நுழைந்தான், அப்போது அவனுக்கு மோசமான ஜலதோசம் அல்லது ஏதோவொன்று ஏற்பட்டிருந்தது. நான் சில ஊழியக்காரர்களோடு இருந்தேன், நாங்கள் நியூஆல்பெனியில் அமர்ந்திருந் தோம். சிறிய மகளுடைய பற்களைச் சரி செய்யும்படியாக மனைவி அவளுடன் போயி ருந்தாள். நான்... நான் அங்கே உட்கார்ந்து கொண்டிருந்த போது, ஏதோவொன்று, "காரை விட்டு வெளியே வந்து நடக்கத் துவங்கு" என்றது.

நான், "அது என்ன?" என்று நினைத் தேன். நான் வெளியே வந்து தெருவில் நடக்கத் தொடங்கினேன். பரிசுத்த ஆவியான வர் என்னை அங்கே சந்தித்து, "சீக்கிரமாக

வீட்டிற்குத் திரும்பிப் போ. பில்லி மரணத் தருவாயில் இருக்கிறான்" என்றார்.

அவன் தன்னுடைய மிதிவண்டியில் மீன்பிடிக்கப் போகும்படியாக நான் அவனை விட்டு வந்திருந்தேன். நல்லது, அவன் அங்கே இறங்கிப் போனான், அவன் மீன் பிடித்துக் கொண்டிருந்த போது, ஆற்றில் விழுந்து நனைந்து விட்டிருப்பானோ என்று நான் நினைத்தேன், அவனுக்கு மோசமான சளிப்பிடித்து, அந்த ஆற்றினருகிலேயே எதுவும் செய்யாமல் இருந்திருக்கிறான். பிறகு அவன் வீட்டிற்குத் திரும்பி வருவதற்குப் பதிலாக, சாம் அவர்களிடம் போய் (அவர் என்னுடைய ஒரு மருத்துவ நண்பர்), "டாக்டர், எனக்கு ஒரு பென்சிலின் ஊசி போடுங்கள். நான்... இன்று நான் நனைந்து விட்டேன். எனக்கு எந்த மோசமான சளியும் பிடிக்க எனக்கு-எனக்கு விருப்பமில்லை" என்று கேட்டுக் கொண்டான். மருத்துவர் அவனுக்கு ஒரு பென்சிலின் ஊசி போட்டார், அதற்குப் பிறகு அவன் வீட்டிற்கு வந்து

சேர்ந்தான், அவனுடைய கால்விரல்களைச் சுற்றிலும் அவ்வளவு பெரிதாக இருந்தது, அவன் கீழே விழுந்திருந்தான்...

24. அங்கிருந்த என்னுடைய மாமியார் அவனை மிகவும் துரிதமாக அழைக்க, அவன் அங்கே ஓடிச் சென்றான், லூயிவில்லி லிருந்து ஒரு சிறப்பு மருத்துவர் அழைக்கப் பட்டார், ஆம்புலன்ஸ் அதிவேகமாக அங்கே வந்து அவனை மருத்துவமனைக்கு கொண்டு சென்றது, அவன் அங்கே உள்ளே படுத்திருந்தான், அவனுடைய இருதயத்தின் மேல் இரண்டு adrenalin ஊசி போட்டார் கள். அவனுடைய இருதயம் 20 முறை துடிக்க வேண்டிய நேரத்தில் பத்து முறை தான் துடித்துக் கொண்டிருந்தது. அவ்விதமாக ஏதோவொன்று. நான் அவசர அவசரமாக வீட்டிற்குச் சேன்றேன். என்னோடிருந்த அந்த ஊழியக்காரர்கள், “பில்லியை உங்களுக்கு எப்படித் தெரியும்?” என்று கேட்டனர். நான், “நீங்கள் கவனித்துப் பாருங்கள்” என்றேன். நாங்கள் வாசலுக்குள் நுழைந்தோம், அங்கே

என்னுடைய மாமியார் முற்றத்தில் நின்று கொண்டு, அவர்களுடைய உச்சக்குரலில் கதறிச் சத்தமிட்டுக் கொண்டிருந்தார்கள். அவர்கள், "பில்லி மருத்துவமனையில் மரித்துக் கொணடிருக்கிறான்" என்றார்கள். நான் அப்படியே அவர்கள் எல்லாரையும் (அங்கேயே) வெளியே விட்டு விட்டு, எவ்வளவு கூடுமோ அவ்வளவு வேகமாக, மருத்துவமனையை நோக்கிச் சென்றேன்.

25. இரண்டு நாட்களுக்கு முன்பு தான், நான், "பில்லி, நீ ஆபத்தான நிலத்தில் நடந்து கொண்டிருக்கிறாய். நீ சேர்ந்துள்ள கூட்டத்தை விட்டு வெளியில் வந்து விடு. கடந்த இரவில், ஜெபத்திற்குப் பிறகு, அங்கே அந்த அறையில் நான் நின்று கொண்டிருக்கையில், நான் படுக்கைக்குப் போகும் முன்பாக கர்த்த ராகிய இயேசு எனக்கு இதைக் காண்பித்தார், நான் என்ன கூறிக் கொண்டிருந்தேனோ அதை நீ கேட்கவே செய்யாததை நான் கண்டேன். ஆனால் நீ ஒரு ஜன்னலிலிருந்து குதித்து, நீ இவ்விதமாக தலையை மேலே

திருப்பி, குதிகால்களும் மேலே (எழும்பி), மேலே, மேலே ஆகாயத்தினூடாகப் போய்க் கொண்டிருப்பதை நான் கண்டேன். அந்த விதமான கூட்டத்தோடு சுற்றுவதை நீ கட்டாயம் விட்டு விட வேண்டும்” என்றேன். நல்லது, அவனோ ஒரு பிள்ளையாக, தொடர்ந்து போய்க் கொண்டிருந்தான்.

26. அதன்பிறகு நான் அங்கே மருத்துவ மனைக்கு விரைந்தேன், இதோ என்னுடைய சிறு டாக்டர் நண்பர், கீழே ஹாலுக்கு வந்தார், அவர் தம்முடைய தொப்பியை கீழே ஹாலில் எறிந்து விட்டு, “பில்லி, சில நிமிடங்களுக்கு முன்பு உம்முடைய மகனை ஏறக்குறைய கொன்றே விட்டேன், அப்படித்தான் நம்பு கிறேன். எங்களுக்கு இங்கு இரண்டு சிறப்பு மருத்தவர்கள் இருக்கிறார்கள். நாங்கள் அவனுக்கு இரண்டு adrenalin ஊசிகளை... சரியாக அவனுடைய இருதயத்தின் மேல் போட்டோம். அவன் இன்னும் சுயநினை வற்றவனாகத் தான் அங்கே படுத்துக் கொண் டிருக்கிறான்” என்றார்.

27. ஒரு தகப்பனாகவும், சுவிசேஷத்தின் ஒரு ஊழியக்காரனாகவும் இருந்து, அதை நேராக்க முயற்சித்து வந்த நான், மெதுவாக நடக்கத் துவங்கினேன். நான், "சரி, டாக்டர், நீர்-நீர் என்னுடைய நண்பர். எப்படி செய்ய வேண்டும் என்று நீர் அறிந்திருக்கிற சிறந்ததை நீர் செய்தீர்" என்று கூறினேன்.

அவர், "பில்லி, அதனால் அவனுக்கு ஒவ்வாமை ஏற்பட்டு விட்டதோ எனக்குத் தெரியவில்லை. நான் முன்பு அவனுக்கு அதைக் கொடுத்திருக்கிறேன் (ஊசியைப் போட்டிருக்கிறேன்). என்ன நடந்ததோ எனக்குத் தெரியவில்லை" என்று கூறினார். அவர் தமது கரங்களைத் தட்டிக் கூப்பிட்டார், ஏனென்றால் நாங்கள் அன்புக்குரிய நண்பர்களாயிருந்தோம். மேலும் அச்சிறு...

அவர் ஹாலில் இறங்கத் தொடங்கினார், நான், "டாக்டர், நான் அவனைப் பார்க்கலாமா?" என்று கேட்டேன்.

அவர், “நல்லது, நாங்கள் அவனில் ட்யூப்புகளை மாட்டி வைத்திருக்கிறோம். போங்கள்” என்றார்.

28. நான் மிக மெள்ள நழுவி உள்ளே சென்று அவன் எங்கேயிருக்கிறான் என்று கவனித்தேன்...?... நான் எனக்குப் பின்னாக கதவை கீழே இழுத்து விட்டுக் கொண்டேன், அங்கே பில்லி அப்படியே... முகம் எவ்வளவு கறுப்பாக இருக்க முடியுமோ அவ்வளவு கறுப்பாகவும், அவனுடைய கண்கள் பின்னோக்கி இருந்தன. அவர்கள் அவனுக்கு சுவாசத்தை குழாய் மூலமாக களகளவென்ற சத்தத்துடன் உட்செலுத்திக் கொண்டிருந் தார்கள், அவனுடைய மூக்கு வழியாக ஒரு குழாய் மாட்டப்பட்டிருந்தது, மற்றும் எல்லா காரியங்களும் இருந்தன. அவனுடைய நாக்கு வெளியே தள்ளிக் கொண்டிருந்தது, அவனு டைய வாய் பின்னோக்கி இழுக்கப்பட் டிருந்தது, அவனுடைய கண்கள் நிலைத்து நின்றன; அவன் எவ்வளவு கறுப்பாக இருக்கக் கூடுமோ அவ்வளவு கறுத்துப்

போய் இருந்தான், நான், “அதோ அவன் இருக்கிறான்” என்று நினைத்தேன். (உடனே) முழங்கால்படியிட்டு, நான், “தேவனே, நீர் என்னுடைய ஒரே மகனை எடுத்துக் கொள்வீரா. கர்த்தாவே, நீர் அவனை எடுத்துக் கொள்வீரா, நான் அவனை என்னுடைய கரங்களில் சுமந்திருக்கிறேனே, அது முதற் கொண்டு. பிள்ளைகளைக் குறித்து நீர் புரிந்து கொள்வீர் என்பது எனக்கு-எனக்குத் தெரியும், கர்த்தாவே. நீர் அவனுக்கு உதவி செய்ய வேண்டும் என்று ஜெபிக்கிறேன்” என்று நினைத்தேன். எவ்வளவு அமைதியாக இருக்க முடியுமோ அவ்வளவு அமைதியாக நான் தேவனுக்கு முன்பாக இருந்தேன்.

29. என்னை இரட்சிக்கும்படியாக மரித்த, அவருடைய சொந்த குமாரனாகிய, தேவ குமாரனாகிய இயேசுவின் மூலமாக அவரிடம் கிட்டிச் சேரும்படியாக (அணுகும்படியாக), இங்கே இந்தப் பிற்பகலில் இந்தப் புனிதமான மேடைக்கு முன்பாக (நிற்கிற) என்னுடைய நியாயாதிபதியாகிய சர்வவல்லமையுள்ள

தேவன்... நான் ஜெபித்துக் கொண்டிருக்கும் போது, இதோ அந்தத் தரிசனம் மறுபடியுமாக வந்தது. அந்த தரிசனத்தில் அவன் அவ்வித மாக கீழே கீழே நோக்கி சுழன்றபடி போய்க் கொண்டிருக்கையில், அவனுடைய கால்களும் தலையும் ஆகாயத்தில் சுற்றி சுற்றி உயரே பறந்து கொண்டிருந்தது, அந்த தரிசனத்தை ஒரு சில இரவுகளுக்கு முன்பு கண்டேன். பிறகு இரண்டு கரங்கள் நீட்டப்பட்டு, இவ்விதமாக அவனைப் பிடித்து, அவனைச் சுமந்தபடி திரும்பி வரத் துவங்குவதை நான் கண்டேன். சற்று நேரத்தில், நான் மேலே நோக்கிப் பார்த்தேன்; அப்போது பில்லி உற்றுப் பார்த்து, அவன், "அப்பா, எங்கே இருக்கிறேன்... நான் எங்கே இருக்கிறேன்?" என்றான்.

நான், "எல்லாம் சரியாக இருக்கிறது, மகனே. எல்லாமே சரியாக இருக்கிறது" என்றேன்.

30. நான் அங்கே சுற்றிச் சென்றேன், டாக்டர் அங்கே நின்று கொண்டு துணை

மருத்துவரிடம் பேசிக் கொண்டிருந்தார். அவர் அங்கிருந்து போவது வரை நான் காத்திருந்தேன். நான் டாக்டரைச் சுற்றி என்னுடைய கரத்தைப் போட்டுக் கொண்டு, நான், "டாக், எல்லாம் முடிந்து விட்டது" என்றேன்.

அவர், "அவன் சுகமாகப் போகிறான் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?" என்று கேட்டார்.

நான், "அவன் சுகமடைந்து விட்டான்" என்றேன். கிறிஸ்து... ஆமென். ஒரு அணுகு முறையைக் குறித்து பேசுதல்.

ஆமாம், யோபு தன்னுடைய பிள்ளைகள் ஒருக்கால் தற்செயலாக பாவம் செய்திருக்க லாம் என்று ஒருவேளை நினைத்து, "அவர் கள் ஒருக்கால் பாவம் செய்திருப்பார்கள், அதைக் குறித்து எனக்கு-எனக்குத் தெரியாது" என்று கூறினான். எனவே அவன் தான் அணுக முடிந்த ஒரே ஒரு வழியை மாத்திரமே அவன் கொண்டிருந்தான்.

அதுதான் சர்வாங்க தகனபலியின் கீழாக இருந்தது.

31. எனவே அவன் சர்வாங்க தகன பலியை கொண்டு சென்று, தன்னுடைய பிள்ளைகளுக்காக பலி செலுத்தினான். அவன் தன்னுடைய பிள்ளைகள் எல்லாருக் காகவும் பலி செலுத்தினான், அது ஒருக்கால்... கவனியுங்கள், பாருங்கள், அவர்கள் ஒருக்கால் பாவம் செய்திருக்கலாம். ஒருக்கால் அவர்கள் யோபுவுடைய பக்கத்தில் வைத்து ஒருக்காலும் பாவம் செய்யாமல் இருந்திருக் கலாம். அவனுக்கு ஒருக்கால் அதைக் குறித்து எதுவும் தெரியாதிருக்கலாம். ஆனால் அவர்கள் வெளியே உலகத்தில் தனியாக இருந்ததை அவன் அறிந்திருந்தான்...

நான் உங்களுக்கு இதைக் கூறுகிறேன்; இன்று நமக்குத் தேவை என்னவென்றால், தங்கள் பிள்ளைகளுக்காக ஜெபிக்கிற நல்ல, பழைமை நாகரீகமான தாய்தகப்பன்மார்கள் தான் இன்னும் அதிகமாக நமக்குத் தேவை. நமக்கு அப்படிப்பட்ட தாய்தகப்பன்மார்கள்

இருந்திருந்தால், எனக்குத் தெரிந்த இளம் பருவத்தினரின் குற்றங்களை ஒழித்துக்கட்ட அது மிகப்பெரிய உதவியாக இருக்கும். முதலாவது, தங்கள் பிள்ளைகளுக்காக ஜெபிக்கிற பழைமை நாகரீகமான தாய்தகப்பன்மார்களை எனக்குக் கொடுங்கள்.

32. இந்தப் பிற்பகல் வேளையில், இதோ பாருங்கள், பையன்களே, சிறு பெண் பிள்ளை களே. அதைப் போன்ற ஒரு தாயோ தகப்பனோ உங்களுக்கு இருந்து, பரிசுத்த ஆவியானவர் உங்கள் இருதயத்தில் பேசிக் கொண்டிருந்து, உங்கள் தாய்மார்களுடைய ஜெபங்களையும் மீறி நீங்கள் நடந்து கொண் டிருப்பீர்களானால், இதை ஞாபகம் கொள் ளுங்கள். நீங்கள் திரும்பி, உங்களைத் தானே கிறிஸ்துவுக்கு ஒப்புவிக்கும் மட்டுமாக, நீங்கள் ஒருபோதும் வாழ்வடையவே மாட்டீர்கள். அது உண்மை.


2 நாளாகமம் 15:2
... நீங்கள் கர்த்தரோடிருந்தால்,
அவர் உங்களோடிருப்பார்;
நீங்கள் அவரைத் தேடினால்
உங்களுக்கு வெளிப்படுவார்;
அவரை விட்டீர்களேயாகில், அவர்
உங்களை விட்டுவிடுவார்.

## அது மிகவும் அப்பாவித்தனமானது

~~~~~~~

பாவம் மிக மிக மயக்கியிழுக்கக்கூடியது. ஓ, அது கவர்ச்சிகரமானது. உண்மையாகவே பாவமானது பசியை தீர்க்கும்விதமாக கேட்டுக் கொண்டேயிருக்கும். அது மிகவும் அப்பாவித்தனமானது. ஏன், அது அவ்வாறு தான் தோற்றமளிக்கிறது... அது மிகவும் கபடற்ற விதமாகத் தோற்றமளிக்கிறது. நீங்கள் அதற்குக் கவனம் செலுத்த வேண்டாம்.

~~~~~~~

செய்தி: யூகித்தல், ஏப்ரல் 8, 1962

சகோ.வில்லியம் பிரன்ஹாம்

# பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டு விலகுங்கள்

2



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்திகளிலிருந்து